# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE

## DEPOSITIONS OF WITNESSES
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
## DEPOSITIONS OF WITNESSES D.W.1

**OS.NO.144/2019**

**Name** : திருமதி.வசந்தா
**Father/Husband Name** : திரு.ஆறுமுகம்

**Age** : 52

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07.07.2026**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

விசாரணை தொடங்கிய நேரம் : 02.55 P.M

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. என்னுடன் பிறந்த சகோதரர்கள் 4 பேர். அவர்கள் அனைவரும் எனக்கு மூத்தவர்கள். எனக்கு 3 அக்காக்கள் இருந்தார்கள். அதில் இருவர் இறந்துவிட்டார்கள். தண்டபாணி என்பவர் தான் மூத்த சகோதரர், ஸ்ரீராமுலு என்பவர் இரண்டாவது சகோதரர். வாதி 2016 ல் தாவா வீட்டுமனையை விலைக்கு வாங்கி 2017 ல் வீடு கட்டி கிரகபிரவேசம் செய்து குடியிருந்து வாழ்ந்து வருகிறார் என்றால், சரியல்ல. நான் தான் 2018 ல் வீடு கட்டி உள்ளேன். அவ்வாறு வீடு கட்டியதற்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. கிரகபிரவேசத்தில் ஸ்ரீராமுலு மற்றும் அவரது மனைவி தான் சடங்குகள் செய்து கொண்டார்கள் என்றால், என் அண்ணன் என்பவர் முறையில் நான் கட்டிய வீட்டில் சடங்குகள் செய்தார்கள். தாங்களும் தங்கள் கணவரும் இருக்கும் நிலையில் உங்கள்

சகோதரர் ஏன் சடங்கு செய்து கொண்டார் என்றால், அவர் குடும்பத்தில் மூத்தவர் என்பதால் அவரை வைத்து கிரகபிரவேசம் செய்தேன். அவருக்கும் மூத்தவர் தண்டபானி அந்த நிகழ்ச்சிக்கு வரவில்லை. அந்த வீட்டிற்கு வீட்டுவரி ரசீது வாதி பெயரில் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், என் பெயரில் ரசீது கொடுத்துள்ளார்கள். தாங்கள் செலுத்திய வரி ரசீதுகளை தாக்கல் செய்துள்ளீரா என்றால், தாக்கல் செய்துள்ளேன். 02.01.2019 தேதியில் நான் வரி கட்டி அந்த ரசீதை தாக்கல் செய்துள்ளேன்.

2. வீடு கிரகபிரவேசம் செய்தது 27.05.2018 என்றால் சரிதான். தங்களுடைய மகள் கஜலட்சுமியை தங்களுடைய அக்கா பானு 11 மாத குழந்தையிலிருந்து வளர்த்து வந்தார் என்றால், சரிதான். கல்லூரி படிக்கும் வரை அவர் தான் வளர்த்தார். அந்த வீட்டின் மின் இணைப்பு வாதி பெயரில் தான் உள்ளது என்றால், அவர் அந்த வீட்டில் இருப்பதால் அவர் பெயரில் வாங்கப்பட்டது. வாதியிடம் தங்கள் மகள் வளர்ந்ததால் அந்த சொத்தை தங்கள் குழந்தை பெயரில் உயில் எழுதி கொடுக்கும்படி மூளை சலவை செய்தேன் என்றால், சரியல்ல. அவ்வாறு உயில் எழுதி கொடுக்கும் படி கட்டாயப்படுத்தி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்று அவரை ஏமாற்றி தங்கள் பெயரில் தானப்பத்திரமாக எழுதிக்கொண்டீர் என்றால், சரியல்ல. அவ்வாறு எழுதி பெற்ற செட்டில்மெண்ட் பத்திரம் 23.10.2018 தேதிகுட்பட்டது என்றால், சரிதான். வாதிக்கு எழுத படிக்க தெரியாது என்றாலும், கை நாட்டு வைப்பார் என்றாலும், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் தான செட்டில்மென்ட் பத்திரம் தான் தங்களால் எழுதி பெறப்பட்டது என்றால், சரிதான், அவராகவே எழுதி கொடுத்தார் என்று சாட்சி கூறுகிறார். பி.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பத்திரத்தில் காலி மனை என்றுதான் சொத்துவிவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஓலை குடிசை தான் இருந்தது. ஆனால் அதை குறிப்பிடவில்லை.

3. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் (வா.சா.ஆ.23 வரிசை) வீடு கிரகபிரவேசத்தின் போது எடுக்கப்பட்டது என்றால், சரிதான். அந்த புகைப்படத்தில் உள்ள வீடு காங்க்ரீட் தளம் போட்ட வீடு என்றால், சரிதான். 27.05.2018 தேதியில் வீடு கட்டி கிரகபிரவேசம் செய்த நிலையில் பத்திரப்பதிவு செய்யும் போது 23.10.2018 தேதியில் குடிசை வீடு இருந்ததாக சொல்வதில் எது உண்மை என்றால், அங்கு குடிசை தான் இருந்தது. மாடி வீடு கட்டிய பிறகு தான் என் கணவர் பெயரில் தான பத்திரம் செய்தேன். வாதியை ஏமாற்றி மாடி வீடு இருப்பதை மறைத்து தங்கள் பெயருக்கு தானப்பத்திரம் எழுதி பெற்றுள்ளீர் என்றால், சரியல்ல. குடிசை வீடு தான் இருந்தது. வீடு இருப்பதை மறைத்து பத்திரபதிவு செய்ததன் காரணமாகவும், அந்த பத்திரம் செல்லாது என்று சொன்னால், சரியல்ல. வாதியிடம் உயில் பத்திரம் செய்வதாக அழைத்து சென்று அதை தான பத்திரமாக மாற்றி சென்றது வாதி அந்த பத்திரத்தை வாங்க போகும் போது தான் தெரிந்தது என்றால், சரியல்ல. தாங்கள் மோசடியாக தானப்பத்திரம் எழுதி பெற்றுக்கொண்டதாக வாதி மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தார் என்றால் சரிதான். அது குறித்து என்னையும் அழைத்து விசாரித்தார்கள். மாவட்ட ஆட்சியரிடமிருந்துஅந்த மனு நில அபகரிப்பு பிரிவிற்கு அனுப்பப்பட்டு அங்கும் விசாரித்தார்கள் என்றால், சரிதான். அவ்வாறு விசாரணை செய்யும் சமயத்தில் தாங்கள் தங்கள் பெயரில் பத்திரம் இருந்ததை வைத்து தங்கள் கணவர் பெயருக்கு தான பத்திரம் எழுதி கொடுத்துள்ளீர் என்றால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 தான் நான் என் கணவர் பெயருக்கு எழுதி கொடுத்த பத்திரம் ஆகும்.

4. அவ்வாறு பத்திரம் செய்த பிறகு பி.வா.சா.ஆ.4 வரி ரசீதினை தங்கள் பெயருக்கு பெற்றுள்ளீர் என்றால், சரிதான். அந்த ரசீது

வழங்கப்படுவதற்கு முன்பாக வீட்டு வரி ரசீது பானு பெயரில் இருந்தது என்றால், ஒரே நாளில் இரண்டு பேருக்கும் ரசீது போட்டுக்கொடுத்தார்கள். நான் தற்போதும் குடியாத்தம் சுண்ணாம்புபேட்டையில் தான்குடியிருந்து வருகிறேன் என்றால், சரிதான். அங்கிருந்தாலும் தாவா வீட்டிற்கு வர போக இருக்கிறோம். தற்போதும் வாதி பானு தான் அந்த வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றால், சரிதான். அவர் இறக்கும் வரைக்கும் அதே வீட்டில் இருக்கட்டும் என்று விட்டு வைத்துள்ளோம். 2019 ல் தங்கள் கணவர் பெயரில் பத்திரம் செய்த பிறகு வாதியை வீட்டை விட்டு வெளியேற்ற முயற்சி செய்தீர் என்றால், சரியல்ல. அதன் பிறகு தான் வாதி 07.05.2019 தேதியில் ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால், சரியல்ல, ஆனால் எனக்கு அறிவிப்பு வந்தது. 23.10.2018 தேதியில் தங்கள் பெயருக்கு பெற்ற தான செட்டில்மெண்ட் பத்திரமும் 03.01.2019 தேதியில் தாங்கள் தங்கள் கணவர் பெயரில் செய்து வைத்த தான பத்திரமும் மோசடியானது என்றும், அதை ரத்து செய்ய வேண்டும் என்றும் வாதி அறிவிப்பு அனுப்பினார் என்றால், சரிதான் அந்த பத்திரங்கள் முறையாக எழுதி கொடுக்கப்பட்டது. அதை எழுதி கொடுக்கும் போது சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள கேமரா முன்பு தான் எழுதி கொடுக்கப்பட்டது.

5. அந்த அறிப்பிற்கு பதில் எதுவும் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. பதில் கொடுத்துள்ளேன். இந்த வழக்கில் தாங்கள் கொடுத்ததாக கூறும் அறிவிப்பை தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. வாதி பானுவை ஏமாற்றி வற்புறுத்தி தங்கள் பெயருக்கு தாவா சொத்து குறித்து தானப்பத்திரம் எழுதி பெற்றது செல்லாது என்றால், சரியல்ல. செல்லாது மற்றும் நடைமுறைக்கு வராத தானப்பத்திரத்தின் அடிப்படையில் தங்கள் கணவர் பெயருக்கு 03.01.2019 தேதியில் எழுதி கொடுத்த தானப்பத்திரமும் செல்லக்கூடியது அல்ல என்றால், சரியல்ல. என்னோட சகோதரர் வந்து

பிரச்சனை செய்ததாக தங்கள் எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

6. தாவா சொத்து வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றாலும், வாதியின் சுவாதினத்திற்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்றால், சரியல்ல. 23.10.2018 தேதியிட்ட தானப்பத்திரமும் 03.01.2019 தேதியிட்ட தானப்பத்திரமும் செல்லக்கூடிய ஆவணம் இல்லை என்று தீர்ப்பாக வேண்டும் என்றாலும், சரியல்ல. தாவாவில் கோரியுள்ளபடி பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்க வேண்டும் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை :**

7. சாட்சி தன்னிடம் காண்பிக்கப்பட்ட வா.சா.ஆ.23 புகைப்படங்களை மீண்டும் பார்க்க வேண்டும் என்று கேட்டதாலும் 1, 2 பிரதிவாதிகளின் வழக்கறிஞரும் அவ்வாறே வேண்டிக்கொண்டதன் அடிப்படையில் சாட்சியிடம் புகைப்படங்கள் கொடுக்கப்பட்டது. அந்த புகைப்படத்தில் ஜோடியாக இருப்பது என் அண்ணன் மற்றும் அண்ணி. அந்த புகைப்படங்களில் கடைசியாக உள்ள புகைப்படத்தில் உள்ள வீடு வீட்டின் முகப்பு, கடை ஆகியவைகள் தாவா சொத்திற்கான வீடு தான். அந்த புகைப்படங்களில் 4 வதாக உள்ள வீட்டின் நீல நிறத்தில் வெளிப்புறத் தோற்றம் காணப்படும் வீடு தாவா வீடு தான். அந்த புகைப்படங்களில் 8 வதாக உள்ள புகைப்படம் கிரகபிரவேசம் செய்யும் போது எடுக்கப்பட்ட புகைப்படம்தான். அதில் என்னுடைய அண்ணன், அண்ணி மற்றும் என் அக்கா பானு இருக்கிறார்கள். என் அக்கா பானு அமர்ந்த நிலையில் இருக்கிறார்.

8. முதல் புகைப்படத்தில் தனியாக நிற்பது நான் தான். என் அக்கா மறைவில் நிற்கிறார்.

**மறு குறுக்குவிசாரணை**

9. அந்த வீட்டின் நீளம், அகலம் மற்றும் பரப்பளவு தெரியுமா என்றால், அதன் பரப்பளவு 1716 ச.அடி ஆகும். அதன் நீள, அகலம் எனக்கு தெரியாது.

விசாரணை முடிந்த நேரம் : 03.40 P.M

சாட்சி இன்று 07.07.2026 ல் திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.